1968 மார்ச் 2]

எடுத்து, கூட்டுப் பட்டாவை தனிப் பட்டாவாக வழங்குவதற்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்ற முறையில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது ஹரிஜனங்களுக்குப் பட்டா வழங்குவது சம்பந்தப்பட்ட கேள்வி. ஹரிஜனங்கள் மொத்தமாக இருந்தால்தான் சலுகைகள் கொடுக்க அவர்களுக்கு நல்ல முறையில் பயன் ஏற்படக் கூடும் என்ற வகையில்தான் இதைப் பலர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, ஹரிஜன மக்களுக்கு அரசால் கொடுக்கப்படுகின்ற மானியங்கள், கடன்கள் அனைத்தும் மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு வழங்கப்படுகிறதா ? அப்படி மானியங்கள், கடன்கள் வழங்கப்படாமல் இருந்தால் அந்த பாரபட்சத்தை நீக்குவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இது போன்ற ஒருசில மானியங்கள் தான் தரப்படுகின்றன. வீடுகள் கட்டுவதற்கு மானியத் தொகை மட்டும் தரப்படுகிறது. விவசாயக் கிணறுகள் வெட்டுவதற்கும், அல்லது உழவு மாடு வாங்குவதற்கும் மானியம் தரப்படவில்லை என்று கருதுகிறேன்.

பதிவுத் துறை

* 125 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :
திரு. என். எஸ். வி. சித்தன் : } மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Registration Department-ல் Section Writers எத்தனை பேர் சிக்கன நடவடிக்கைகள் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் ?

(இ) இதனால் அரசாங்கத்திற்கு மீதமாகும் தொகை என்ன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) வேலை வாய்ப்பகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட அறுபத்தி மூன்று தற்காலிகப் பட்டியலில் சேராப்பிரிவு எழுத்தர். "கோப்புமுறை" செயல்படுத்தப்பட்டதே இதற்குக் காரணம்.

(இ) திங்கள் ஒன்றுக்கு 7,370 ரூபாய் மிச்சமாகிறது.

*126 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Registration Department-ல் 1—3—1967-ல் எத்தனை Inspector-கள் Posts ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(இ) இவர்களின் Scale of Pay என்ன ?

(உ) ஒரு வருடத்தில் இந்த புது post-யினால் அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிக செலவு ஏற்படுகிறது ?

(எ) District Registrar Annual Inspection அன்னியில் காரியாலயங்களுக்கு Surprise visit செய்ய வேண்டும் என்ற புது உத்தரவால் இவர்களுக்கு வருடாந்தர T.A. செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) நான்கு பதவிகள்.

(இ) ரூபாய் 600—30—900 (மாதம் ஒன்றுக்கு).

(உ) ரூபாய் 79,000.

(எ) ரூபாய் 2,315 (கடந்த மூன்றாண்டுகளின் சராசரி).

Dr. H. V. HANDE : Sir he Hon. Minister has given some figures with regard to retrenchment but the actual retrenchment does not come to the surface .

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார். தலைவர் அவர்களே, முதல் கேள்வி கேட்டவர்களுக்குத்தான் முதல் உப கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டுமென்ற மரபு இருந்து வருகிறது, அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, ஏன் இப்பொழுது அந்த நடைமுறை மாற்றப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் வினா கேட்டவர்களுக்குத்தான் முதல் துணை வினா கேட்க அனுமதிக்க வேண்டுமென்று விதியிலே இல்லை. ஆனால் நாம் அதை மரபாகக் கடைபிடித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அதை பாயிண்ட் ஆஃப் ஆர்டராகக் கேட்க முடியாது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : முதல் கேள்வி கேட்டவர்களுக்குத்தான் முதல் துணைக் கேள்வி கேட்க அனுமதி அளிக்க வேண்டுமென்ற மரபு இருக்கிறதே, அது இப்பொழுது மாற்றப்படுகிறதா ? முதல் உப கேள்வி கேட்க முதல் கேள்வி கேட்டவருக்கு அனுமதி அளிக்கிற நடைமுறையை ஏன் அனுமதிக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதல் வினா கேட்டவருக்குத்தான் முதல் துணை வினா அனுமதிக்க வேண்டுமென்று விதியிலே இல்லை, மரபாகத்தான் கையாளப்பட்டு வருகிறது. நீங்கள் கையைத் தூக்கவில்லை, ஆகவே உங்களைக் கூப்பிடவில்லை. உங்களுக்குத் துணை வினா கேட்க அனுமதி கொடுக்கிறேன். அவர் (டாக்டர், எச். வி. ஹாண்டே) முதலில் கேட்கட்டும்.

Dr. H. V. HANDE : There are three types of retrenchment. One type of retrenchment is that a number of people are not getting promotions at a pace at which they would have normally got, if this policy ha l not been introduced. It is something like the autom .tion adopted in the Life Insurance Corporation, where people are not re trenched but their promotion opportunities are red ced to a minimum. As this is a serious matter involving retardation of promotion opportunities, will this Government re-examine the matter ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தப் பதிவுத் துறையிலே புதிதாக கொண்டு வந்திருக்கும் கோப்பு முறையைப் பற்றி, அதனுடைய விளைவுகளைப் பற்றி மிக விரிவாக இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே உள்ள அரசாங்கம் இந்த திட்டத்தைக் கொண்டு வந்து விட்டது. அதை இப்பொழுது செயல்படுத்தி வருகிறோம். ஓராண்டிற்கு பின்னாலே இதை மறு பரிசீலனை செய்யலாம் என்று இருக்கிறோம். இதன் காரணமாக யாராவது பாதிக்கப்பட்டார்கள் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதிலே நிரந்தரமாக இருக்கக் கூடிய 412 எழுத்தர்கள் வேறு துறைக்கு, அவர்கள் " பேரண்ட் டிபார்ட்மெண்ட் "டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலை யொன்றும் போகவில்லை.

அதற்கடுத்தபடியாக, செக்‌ஷன் ரைட்டர்ஸ் என்பது. இதிலே இரண்டு பிரிவுகள் உள்ளன. பட்டியலிலே உள்ளவர்கள், பட்டியலிலே இல்லாதவர்கள்—லிஸ்டட், நான்-லிஸ்டட என்று. பட்டியலிலே உள்ளவர் ளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, அவர்களுடைய தகுதிகள், க்வாலி பிகேஷன்ஸ், இவைகளுக்குத் தகுந்தவாறு, ஐ. ஜி-யே எடுக்கின்றார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை. இந்தக் கேள்வி நான்-லிஸ்டட், அதாவது பட்டியலில் இல்லாத சிலரை, 63 பேரை எடுக்கப் பட்டது குறித்தது. ஏற்கனவே நான் சொன்னேன், அவர்கள்கூட வேலையிலிருந்து நீக்கப்படவில்லை. இந்த லிஸ்டட், நான்-லிஸ்டட்டில்

முதலில் சொன்னதைப்பற்றி கேள்வி எழவில்லை. இந்த லிஸ்டட்டில் எப்பொழுது தேவைப்படுகிறதோ அப்பொழுதைக்கப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். இந்த நான்-லிஸ்டட்டிலிருந்து வேலைக்குத் தேவை எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுது எடுத்துக் கொள்கிருர்கள். அவர் கள் கூட வேலை நீக்கம் செய்யப்படவில்லை. நிரந்தரமாக இருந்து வேலையிலேயிருந்து போகச் சொல்லப்பட்டவர்கள் அல்ல அந்த 63 போர்கள். ஆகையால் தொடர்ந்து வேலையிலேயிருந்தவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி இருந்தபோதிலும் கூட இந்த முறையை ஏப்ரல் மாதத்தில் மறுபரிசீலனை செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, மறுபரிசீலனை என்று சொல்லிவிட்டதால், மீண்டும் பழைய முறையையே கையாளுவதன் மூலம் அவர்களை வேலையிலிருந்து நீக்காமல் இருக்க, நிரந்தரமாக ஆக்க, பழைய முறையையே கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதை நான் தெளிவாகவே சொன்னேன். இந்த முறையிலே யாரும் பாதிக்கப்படவில்லை. அதுதான் அரசாங்க தரப்பினுடைய கருத்தும். இந்த முறை தவரு, சரியா என்பது வேறு பிரச்சினை. ஆனல் இந்த முறை கொண்டு வந்த காரணத்தினுல் யாராவது பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதும் வேறு பிரச்சினை. இந்த முறை சரியா, தவரு என்பதைக் குறித்து மறு பரிசீலனை செய்யப் போகின்ருேம். இந்தக் கொள்கையின் காரணமாக யாரும் வேலையி லிருந்து நீக்கப்படவில்லை. இந்த டெம்பரரியாக, இடைக்காலமாக வைக் கின்ற செக்ஷன் ரைட்டர்ஸ் இரண்டு விதத்திலே இருக்கின்றது. தேவை யானபொழுது எடுததுக் கொள்ளப்படுகிறவர்கள் ஒன்று. இது இந்த துறையிலே மட்டும் அல்ல ; எல்லாத் துறைகளிலேயும் வேலை அதிக மாகிறபொழுது இடைக்காலமாக எடுத்துக்கொள்ளப் படுபவர்கள் உண்டு. மற்ருென்றைச் சேர்ந்தவர்கள் சாதாரணமாக எடுக்கப்படுவது இல்லை. முதலில் சொன்னவர்களுக்கும் சௌகரியம் வேண்டுமென்று சொன்னுல் அதைப்பற்றி தனியாக எழுதி அனுப்பினுல் பரிசீலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையிலே ஏறத்தாழ 63 பேர்கள் நீக்கப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அவர்கள் அதிக பட்சம் எத்தனை ஆண்டுக்காலம் வேலை யிலிருந்தார்கள் என்று சொல்ல முடியுமா? இந்தக் கோப்பு முறையின் காரணமாக இந்தத் துறையிலே வேலைப்பளு அதிகமாக ஆகி இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலையிலிருந்து நீக்கப்பட்டதாகச் சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது என்று ஏற்கெனவே சொன்னேன், யாரும் வேலையிலிருந்து நீக்கப்படவில்லை. எல்லாத் துறைகளிலும் இடைக்காலமாக வேலை அதிகமாகிறபொழுது நியமிக்கப்படுவது உண்டு. அதைப் போலவே இந்த பதிவுத் துறையிலேயும் நியமிக்கப்பட்டிருக் கிருர்கள். இது இன்றைக்கு அல்ல, நீண்ட நெடுங்காலமாகவே, எந்த மாவட்டத்திலே துணைப் பதிவாளர் அலுவலகத்திலே தேவைப் படுகிறதோ அங்கெல்லாம் பட்டியலில் இருந்து ஆட்கள் நியமிக்கப்படுவது உண்டு. இந்த லிஸ்டட், நான்-லிஸ்டட், இவைகளில் இந்தநான்-லிஸ்டட்டில் உள்ளவர் களுக்கு எப்பொழுதும் வேலை இருப்பதில்லை. அவர்களிலே 63 பேர் வேலை இல்லாத காரணத்தாலே வேலையிலிருந்து எடுக்கப்பட்டார்கள். பட்டியலிலே உள்ளவர்களுக்கு, எப்பொழுதைக்கெப்பொழுது வேலை வரு கிறதோ அப்பொழுதைக்கப்பொழுது வேலையில் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று இப்பொழுதே உத்தரவு இருக்கின்றது.

வேலைப் பளுவைக் குறித்து புதிதாக எந்த உத்தரவும் போடப்பட வில்லை. 1950-ம் ஆண்டே ஒவ்வொரு அலுவலகத்திலும் இருக்கிற வேலைகளுக் கேற்றவாறு எத்தனை பேரை நியமிக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. அந்த விதியை இப்பொழுதும் பின்பற்றி வருகிறோம். அதிலே எந்த மாற்றமும் கிடையாது.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், பதிவுத் துறையிலே புதிதாக ஏற்படுத்தியுள்ள பைலிங் முறை இருக்கிறதே, அதனால் தஸ்தாவேஜி களுகக்கு பாதுகாப்பு இல்லை என்றும், ஏற்கெனவே இருந்தது போல் ஒரிஜினலைப் பார்த்து ஈ அடித்தான் காப்பி போல பைலிங்கில் காபி சேர்ப்பது மிகவும் கடினம் என்றும் பொதுமக்கள் கருதுவதன் காரணமாக பழைய முறையையே மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய முறை தேவையா, தேவை இல்லையா என்பது கொள்கை பிரச்னை. இந்தத் துறையின் மான்யக் கோரிக்கை வரும்பொழுது இதைப் பற்றி விவாதிக்கலாம். அப்படி இந்த முறையில் ஏதாவது தவறுகள் இருக்குமானால் மறு பரிசீலனை செய்வதற்கும் இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்த முறையில் தவறு இருப்பதாக இதுவரையில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. இந்த முறையே கூட ஏற்கெனவே சில பகுதிகளில் அமலில் இருந்துவந்தது. அப்படியிருந்ததைத்தான் எல்லாப் பகுதி களுக்கும் அதாவது பைலிங் ஸிஸ்டத்தை எல்லாப்பகுதிகளுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்ற ஒரு முடிவை அரசாங்கம் ஒரு சட்டத்தின் மூலம் இந்த மன்றத்தின் வாயிலாக முடிவெடுத்தது. ஆகவே, அதை மாற்றும் பிரச்சினை இப்போதைக்கு எழவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : பைலிங் ஸிஸ்டத்தில் ஏற்படக் கூடிய தவறுதல்கள் உடனடியாக தெரியாது. லூஸ்ஷீட்ஸை நாம் ஒட்டு கிறோம். அப்படி ஒட்டக்கூடிய நிலைமையில் ஏதாவது தவறுதல்கள் ஏற்படலாம். பின்னால் ஏதாவது விவகாரம் வரும்பொழுது தான் அந்த தப்பிதம் ஏற்பட்டது தெரியலாம். மக்கள் இதைப்பற்றிய நம்பிக்கையை இழந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு இந்த சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே இருந்த முறைப்படி ஒரு பெரிய புத்தகத்தில் பத்திரங்களைப் பார்த்து எழுதப்பட்டு வந்தது. இப்பொழுதுள்ள முறைப்படி பத்திரத்தை பதிவுக்குக் கொண்டுவரும் பொழுது கூடவே ஒரு நகலும் கொண்டுவந்து விடுவார்கள், அதை ஒரு ரிஜிஸ்டரில் ஒட்டி வைக்கிறோம். புதிய முறையில் ஏதாவது தவறு நடந்துவிடும், ஒட்டியிருக்கக்கூடிய காகிதத்தை பிரித்துவிடலாம் என்ற ஒரு வாதம் சொல்லப்படுகிறது. அதைப் போலவே பழைய முறையிலும் இருக்கிற காகிதத்தையே தனியாக எடுத்துக் கொண்டு போய்விடலாம். ஆகவே, இரண்டிலும் தவறுகள் ஏற்படலாம். இந்த மன்றத்தில் இதற்காக ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்தப் புதிய முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதை ஓராண்டு காலம் அமல் நடத்திப் பார்க்கலாம். அதற்குப் பின்னாலே அதைப்பற்றிய மொத்தக் கருத்தை வைத்து, எல்லோரும் சேர்ந்து விவாதித்து ஒரு முடிவு எடுப்பது தான் நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் டாகுமெண்டு ரைடர்ஸ், பத்திரம் எழுதுபவர்கள் திரு. கொச்சி அரசாங்கத் திலுள்ள சட்டப்படி லைசென்ஸ் வாங்கவேண்டும். ஆனால், புதியதாக லைசென்ஸ் வாங்குவதற்குள்ள வாய்ப்பு இல்லாமல், தமிழகச் சட்டம் அங்கே அமலில் இல்லாத காரணத்தினால் பத்திரம் எழுதுவதற்கு இடை யூறுகள் இருக்கின்றன. ஆகவே, தமிழகச் சட்டத்தை அந்தப் பகுதிக்கு விஸ்தரித்து டாகுமெண்டு எழுதுபவர்களுக்கு இருக்கிற கஷ்டத்தை நிவர்த்தி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : டாகுமெண்டு ரைடர்ஸுக்கு லைசென்ஸ் வேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு பிரச்னை. அது முன்பு திருவாங்கூரைச் சேர்ந்திருந்த காரணத்தினால், கன்னியாகுமரியில் ஒரு நிலைமை நிலவுகிறது. தமிழ் நாட்டில் வேறு நிலைமை நிலவுகிறது. ஆகவே, இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்து பதில் சொல்ல முடியும்.